446

17 OCT 192

உ

கணபதி து

களத்தூர் ஐயனார் பதிகம்

முதலிய ஐந்து பிரபந்தங்கள்

கரு. ஆ. ஆறுமுகன்செட்டியாராலும்

அவர்குமாரர்

சு. கி. கரு. கறுப்பன் செட்டியாராலும்

இயற்றப்பெற்று.

பொள்ளாச்சி முனிசிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,

தா. கனகராஜையரால்

பரிசோதிப்பித்து

க்கலிங்கம்செட்டியாரால்

ானந்தா அச்சுக்கூடத்தில்

கப்பெற்றன.

923.

Q2998:.38.21K4
M23.
179393

உ

கணபதி துணை.

அரமனைச் சிறுவயலைச்சார்ந்த

களத்தூர் ஐயனார் பேரில்

பதிகமும், பஞ்சகமும், அகவலும்.

ஷையூர் கறு.ஆ. ஆறுமுகஞ் செட்டியார்

இயற்றியவை

பொள்ளாச்சி முனிஸிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

நா கனகராஜையரால்,

பரிசோதிப்பித்து,

ராம. அரு. சோக்கலிங்கஞ்செட்டியாரால்

பொள்ளாச்சி விவேகானந்தா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றன.

1923.

OFFICE OF ... MADRAS
17 OCT 1923
R2998 ... 1923

முகவுரை

ஆஸ்திகர்களே,

நமது தமிழ் நாட்டில் முத்தமிழும் வல்ல வித்வான்கள் பலர் பூர்வகாலத்தில் பக்திரஸம் ததும்பும் தெய்வ ஸ்தோத்திரங்களைப் பாடி ஸர்வ ஜனங்களும் மகிழ்வுடன் படனம்செய்து ஆனந்த மடையும்படி பேருபகாரம்செய்திருக்கிறார்கள். தற்காலத்திலும் சிலர் இலக்கணவிலக்கியப் பயிற்சிபெற்றும், பெருமலும் இறைவனருளால், கவனசக்தி வாய்ந்தவர்களாய் எளிமையான நடையில் அவர்கள் மனதிற்குத் தோன்றிய விஷயங்களை யமைத்துப் பதிகங்களும், பிற பிரபந்தங்களும் பாடி அரங்கேற்றும் இடமும் சந்தர்ப்பமும் வாயாமையால் அறிந்தோர் ஆதரவேற்று அச்சுவாகனத்தேற்றி வெளியிட்டு உலகத்தார் கைக்கொள்ளுமாறு செய்கின்றனர். பிற்கூறிய வகுப்பைச்சேர்ந்த களத்தூர் ஐயனார்பதிகம், பஞ்சகம், அகவல் என்ற பிரபந்தங்கள் பொள்ளாச்சியி லிருக்கும் ஸ்ரீமத் ராம. அரு. சொக்கலிங்கம்செட்டியா ரவர்களாற் பரிசோதித்து அச்சிடும்பொருட்டு என்னிடம் தரப்பெற்றன.

ஆசிரியர் ஆறுமுகன்செட்டியார் என்பவர். நகரமரபினருள் மிகுதியும் மதிப்புற்ற ஒரு வித்வத் பரம்பரையில் தோன்றிய இவர் தமிழ்ப்பயிற்சி இளமையிலே பெற்றுக் கவியமைதியுணர்ந்தவர் என்று தம் நாட்டவராற் பாராட்டப் பெற்றவர். இவர் இப்பொழுது ஜீவந்தராயில்லாமையால் இவரது பாடல்களிற்சில பல திருத்தங்கள் இயன்றவளவு இவர் தம் நோக்கத்திற்கு மாறுபாடில்லாமலே நான் செய்துளேன். நகரமரபினர், நன்னோக்கங்கொண்டே நான் செய்துள்ள இத் திருத்தங்களை அங்கீகரிப்பர் என்றே நம்புகிறேன். இப்புலவர் தம் குமாரரும் கிருஷ்ணப்ப செட்டியார் சுவீகார புத்திரரும் ஆகிய கறுப்பன்செட்டியார் என்பவர் ஸ்ரீமான் ராம. அரு. சொக்கலிங்கம்செட்டியாரின் வேண்டுகோளின் படி ஆலம்பற்றுச் சித்திவிநாயகர் பதிகம் இயற்றித் தந்தனர். இதனை அச்சிடும் விஷயத்தில் அவரே பிழைதிருத்த இடந் தந்து பிறகு நான் பார்வையிட்டு அச்சிட்டுளேன். இவ் வெல்லாப் பிரபந்தங்களும் பக்திமான்களுக்கு மகிழ்ச்சி தந்து நாட்டில் வழங்குமென நம்புகிறேன். அன்புமிகையால் இயன்ற பாடல்களில் அறிவுடையார் குற்றம் ஆராய மாட்டார் என்று அறிவேன். சுபமஸ்து.

நா. கனகராஜையர்,
பரிசோதகர்.

ஸ்ரீ

சிறப்புப் பாயிரம்.

—*:o:*—

தென்றமிழ் மொழியிற் றிப்பிய நாவலர்
மெய்ம்மொழி யுணர்த்தும் வேதம் போன்றுள
தோத்திர மநேகஞ் சொற்றன ரவைபோல்
இந்நாட் புலவரு மியலிசை நாடக
முத்தமிழ் பயின்று முதல்வ னருள்பெறப்
பற்பல பெயராற் பரமனைப் பாடியே
அருட்பெருக் கடையு மவா மிக்கனராய்
நாவலர் பாவலர் நல்லிசைப் புலவர்
கவிராசர் புவி புகழ் பண்டிதர்
என்னும் விருதுகள் ஈவோ ரில்லாக்
கால நிலையைக் கருத்தி லூன்றித்
தாமே சூடித் தருந்தமிழ் மாலைகள்
பிழையை நீக்கிப் பிழைப்பதன் பொருட்டு
தமிழின் சுவையைத் தாம்பயின் றறியாச்
செல்வர் பொய்ப்புகழைச் சிறப்புறப் பாடி
அழியும் பொருள்சிறி தடைந்து மகிழ்வோர்
சிலரால் மற்றையர் தெய்வத் தமிழைப்
பயின்றது பரமன் பதம் புகழுதற்கே
என்னு மெய்ம்மை யினிதறிந் தனராய்

IV

எவ்வெப் பெயரா லெவ்வெவர் போற்றினும்
அவ்வப் பெயரொடு மாங்கடைந் தருள்செயும்
தெய்வத் திருப்புகழ் செப்பித் திரிகுநர்
பிற்படக் கூறிய பெருந்தகைப் புலவருள்
இயற்றமி ழமைதி யியன்றவா றோர்ந்து
தம்முடைக் குலத்துத் தலைமைகொள் தெய்வமாம்
அரியரன் மதலை விரிபுகழ்ப் பதிகம்
பஞ்சகம், அகவல் பண்முறைப் பாடல்
பிறவும் புகன்று பெரும்புகழ் பெற்றோன்
பொருட்குவை வணிகர் பெருக்குடி மரபின்
நந்தா விளக்காய் நற்றமிழ்ப் புலவர்
குடிவிளங் கியல்பிற் படியினிற் றோன்றிய
நல்லோ னாறு முக நாவ லவன்
இன்னவன் மைந்தனு மின்றமிழ்ப் புலமை
வாய்ந்து சிறந்தோன் வருகல்லல் நகரின்
சித்திவிநாயகர் திருப் பதிகஞ் சொலிப்
பெரும் புகழ் பெற்றனன் விரும்பியவாறே
இன்னவர் புகழிம் மண்ணவரால் நன்
றிசைக்கப் படுகென வெம்பிரா னிணையடி
போற்றிப் புகழ்ந்தனென் புரையில் வாழ்வுறவே.

நா. கனகராஜையர்.

உ

முருகன் துணை.

களத்தூர் அய்யனார் பதிகம்.

காப்பு

செல்வக் களத்தூர் சிறக்க வமர்ந்திருக்கும்
செல்வன் அரியரனார் செல்வன்மேற்—சொல்பதிகம்
வேதப் பொருளாகும் வேழமுகத் தைங்கரனார்
பாதத் துணைகொள்ளும் பார்.

சரஸ்வதி.

வெறிகமழு மலர்பொதுளுந் தண்டலைசூழ்
திருக்களத்தூர் மேவாநின்ற,
வெறியயில்சொ லரியரன்சே யெமை
யுடையான் புகழ்பரவி யிசைக்குமிந்நூல்
அறிவுருவமாய கலைமகளருளாற் சிறப்படைந்
திவ் வவனி மீது
செறிவினிமை பொருளமைதி நலஞ்சிறந்து
பொலியுமென தெளிவுற்றேனே

அவையடக்கம்.

கலையறிவு சிறிதேனு முறுமுறையிற்
பெரியோரைக் கலந்து போற்றும்,
நிலையறியா விழலேனு முளத்தெழுந்த
வாசையினு னிகழ்த்தப் புக்க,
தலைமைபெறு மெய்மையுடைய வையனார்
திருப்பதிகம் தரணிமீது,
புலமையுளார் போற்றலுறும் பெருமையுறு
மவன்புகழைப் பொருந்தலாலே.

ஆக்கியோன் பெயர் முதலியன.

தனவணிக குலத்தவர்கள் வழிவழியாய்ப் பெருகியறம் தழைக்கச்செய்யும், புனவணிகவின் பெருகு கல்விநகர் வாழ்ந்த தமிழ்ப் புலமை சான்றோன், இனவணிக ளமைந்ததமி ழிலக்கணமு மிலக்கியமு மினையக்கற்றோன், கனவணிகர் குழையுடையான் ஆறுமுகன் ஐயனிசைக்கவி செய்தானே.

நூல்.

மலர்க்கரந் தாங்கி மாயோன் வளர்த்திட வளர்ந்தசேயே, பலர்க்கிரங்குளத்தான் மிக்க பத்தாற் பாவப்பட்டாய், வலக்கரத் தபயந் தந்து வரதனே யெம்மை யாள்வாய், குலச்சிறப் புறுங் களத்தூர்க் கோயில்வா ழையனாரே.

வணங்குவார்நினைத்தவெல்லா மகிழ்வுடனருளிக் காக்க, விணங்குவாய் எண்ணி லாநல் வரங்களும் ஈவாயென்றும், மணங்குலாம் பொழில்கள் சூழ்ந்த வண்டமிழ்ப் பாண்டிநாட்டில், குணங்குலாந் திருக்களத்தூர்க் கோயில்வா ழையனாரே.

கடுக்கையுங் கங்கையாறும் கதிரிளம் பிறையுஞ் சூடும், உடுக்கையேந்திய கைபெம்மான் உளங்கனிந் தரியும் பெண்டாய், அடுக்கை கண்டணைந்து பெற்ற வரும்பெறல் மைந்தா தானம், கொடுக்கைவாழ் திருக்களத்தூர்க் கோயில்வா ழையனாரே.

தாருக வனத்து வாழ்ந்த தவசியர் தவத்தர் பெண்டிர், பாருலகனைத்து மாரும் பரயணை மாய்க்க வெண்ணிட், போரியற்றிய நாள்வந்து புவியிடைத்

தோன்றி வாழ்வாய், ஆரருள்புரி களத்தூர்க் கோயி ல்வா ழையனே.

பூரணியொருபால் நிற்கப் புட்கலை யொருபால் நிற்க, ஆரண மறிய லாகா வரியரன் முதலாய் வந்தாய் காரணப் பொருளாய்நின்ற கருணை வாரிதியே யாள்வாய், கோரியதருங் களத்தூர்க் கோயில்வா ழையனே.

போற்றிய சூரர்கட் கின்பம் போற்றார்க்குத் துன்பந் தந்து, சாற்றிய மறைந்சொல் மெய்ம்மை தாபிக்கவந்த சாத்தா, பாற்றிய வினையே னுக்குப பதம் பெறு நிலைதந்தாள்வாய், ஆற்றிய நலக் களத் தூர்க் கோயில் வாழையனே.

இலச்சினை விடையாக் கொண்ட வெம்பிரான் தந்தையாக, மிலைச்சிய துளவத்தம்மான் மேவிநற்றாயா ய்ச்சேரப், பலச்சினைமிகப்பெற்றோங்கு பழம்பெரு வனத்தில்வந்தோய், கொலைத்தொழில் தவிர்களத்தூ ர்க்கோயில்வா ழையனே.

வேண்டியவரங்களெல்லாம் விழைவுட னடியார்க் கீந்து, பூண்டிய விசையி னோக்கு டலவாற்பாவப்

பட்டாய், வேண்டிய வின்பமுத்தி சிறப்புறவளிக்குந் தேவே, ஆண்டருள் திருக் களத்தூர்க் கோயில்வா ழையனுரே.

நிறைதவ முடையார்க் கேனும்நீளறம் புரிந்தார்க் கேனும், குறைவில்மெய்யின்பத்தோற்றங் குறுகுதல் நின்னலன்றி, முறையுறவமைதல் உண்டோ முழுமு தற்செல்வவாழ்வே, அறைபுகழ்மிகுங்களத்தூர்க்கோ யில்வாழையனுரே.

அன்பினால்நின்பால்வந் தனடிதொழுமடியாராவார் இன்பமார்நிலயமெய்த வியற்றுவாய் தேவதேவே வன்பினால்மிகுத்தோர்செம்மை வழிப்படா முறையுஞ் செய்வாய், கொன்றையார்திருக்களத்தூர்க் கோயில் வாழையனுரே.

வாழ்த்து

வாழிதிருக்களத்தூர் வாழியுடையவையன்
வாழியவனடியர் வாழியரோ— வழிசையும்
செந்தமிழு மாராய்ந்த தென்பாண்டி நாடுடைய
அந்தணரு மற்றையரும்.

திருக்களத்தூர்-
உடைய அய்யனார் பஞ்ரகம்.

காப்பு.

திருக்களத்தூர்ச் செல்வன் சிவன்றிருமால் மைந்தன்
கருக்களத்தூர் புன்மை கடிவான்—திருப்புகழை
ஐந்து கவி யாயியற்ற ஐந்துகரத் தும்பிமுகன்-
கந்தமலர்ச் சேவடிகள் காப்பு.

நூல்.

அகரமே யுகரமே மகரமே யென்று மூன்
றக்கரத்தாலமைந்த
அருவமே யுருவமே யருவுருவமாகின்ற
ஆனந்தவருள் நிலயமே
மகரமே யெறிகடலை யுடைகொண்ட நிலமிசையும்
வானகத் தேயுமசுரர்
வதைபுரிய முற்படப் பழிபாவ மிக்குறுதல்
மனமலரில் நன்கறிந்தே
சிகரமே பொன்னுற்ற வெள்ளியங்கிரிவாழ்ந்த
தேவ தேவேச னருளச்
செகதலந்தனிலுற்று மிகுமவுணர் வலிகெடச்
செய்வித்த கருணை முகிலே
ககரமுந் திகரமும் பணிவார்க்கு நல்வாழ்வு
காட்டியருளுடையய்யனே.

களிக்கடைந் திடுகொண்ட குளக்கடைந் திறை
கொண்ட, களத்திவக் துறை யையனே.

எக்காலு நின்புகழை எண்ணிமகிழ் நெஞ்சகமு
மேத்தித் துதிக்கு நாவும்

எளியனேற் கருள்புரிகவென வேண்டியடியார்கள்
எண்ணிலார் பணிபுரியவே

பொன்னுரு மன்னனுந் தனக்கே சிவனென்று
பணியுவோர் வாழ்த்துரைக்கப்

பொன்னருள்வை நிலனருள்வை மனையருள்வை
மகனருள்வை போகமுந் தருள்வையே

முன்னைய துணையென்று நின்னன்புபுரியாத
மூடர்களை முன்னிழக்கே

முறை முறையினை நித்த திக்தப் புகழ்ந்துனடி
முளரியிணை போற்றவைப்பாய்

கடனெவனச் சொலியுவோர்களைவாழ்த்தாத
கருணைபுரிபுடையப்பனே.

களிக்கடைந்திடுகொண்டகுளக்கடைந்திறை
கொண்ட, களத்திவக்துறையையனே.

இவ்வுலகவாழ்வினிற் சிலகாலநன் னிலையும்
இன்பமுஞ் செல்வவாழ்வும்

இளையாதசெல்வாக்கும் வளையாதபெருமிதமும்
 எதிராதுபகைவர்பணிவும்
செவ்வியுமமைந்திருப்போர்நினது சேவடிச்
 செங்கமலமுற்பிறப்பில்
திதிவாரநாளொன்றும் வழுவாதுபுரிபூசை
 செய்துவருபயனென்னவே
எவ்வமறவுணர்வார்கள் ஒளவியமகற்றி நின்
 னிணையடிகள் பூசைபுரிவார்
இப்பிறப்பினுமின்னு மினிவருபிறப்பினும்
 இன்பப்பெருக்கெய்தவே,
சவ்வியமெய்யன்பர்க்கு திவ்வியமெய்யன்புடைய
 கையவெம்முடையையபனே
களித்தடைந்திடுதொண்டர் உளந்தடைந்திறை
 கொண்ட களந்திவந்துறைபயனே.

பூவுலகவைத்தியர்கள் தீராதுபிணியென்று
 போக்கியபல்பிணியாளரும்
போந்துநின்னருள்பெறத்திருநீறுகாப்பிடிற்
 புரையற்றவின்பமடைவார்
பாவியர்கள்சண்டாளர் கொலைகாரர் நின்னுடைய
 பாதம்புகழ்ந்தாலினில்

படுநாகி லாழ்ந்திடார் சுசருலகில் வாழ்ந்துமே
பாக்கியப் பயனெய்துவார்
சாவியுறமழையற்ற நாளினுன்கருணைமழை
தழைவுறச் செயுநிலமெலாஞ்.
சவியாத வளமாகி வளவனுடென்னவே
தமிழ்நாட்டை யாக்குவிப்பாய்
காவிவிழி யிணைகொண்ட தேவியிரு வோர்மகிழ
கந்தமலர் மாலைகொண்டாய்
களித்தடைந் திடுதொண்டருளத்தடைந் திறை
கொண்ட, களத்திவந் துறையையனே.

முத்தமிழின்வகையுமைமங்கவிவகையு மறிகிலேன்
மூடிவெட்டு நான்காமென
முதல்வனருள் பெறுபுலவ ருளியபிரபந்தவகை
முறைமுறையி னுய்ந்தறிகிலேன்,
சுத்தமனமுடையவர்கள்சென்றநிலையோர்ந்துநெறி
சொற்றநூ லோதி யறியேன்
சொன்னபுன்சொற்றொடையுநன்னயத்தொடை
-யலாய்ச், சூடியருள்புரிய வருவாய்
பத்தர்மனமலரில்விளை யாடிவரு செல்வமே
பழமறையினடிமுடிவுமாம்
பாமனருள்மதலையே யறிவினிலையறிய வரு

பாதாரவிந்த மருள்வாய்
கைத்துடைய வாழ்வருளி யுத்தமநல்வாழ்வுதவு
கருணைமுகிலுடையையனே
களித்தடைந்திடு தொண்ட ருளத்தடைந்திறை
கொண்ட, களத்திவந்துறையையனே.

களத்தூர் அய்யனார் பஞ்சகம் முற்றும்.

அகவல்.

--:*:--

உலகம் படைத்தளித் தொழிக்கும் பூர்ணன்
பாற்கடல் நாகப் பள்ளியிற் றுயின்றோன்
தாருக வனத்துத் தவசியர் பொருட்டுப்
புலவோர் துதிக்க நிலவோர் மதிக்க
ஆண்பெண் ணாகி யவனியி லடைந்து
சஞ்சரித் திடுகையிற் சனன மாகிய
ஐயனே மெய்யனே கையனே துய்யனே
சராசரநிறைந்த பராபரமூர்த்தி
சச்சிதானந்த சர்வபரிபூரணா

ஆரண காரணி பூரணி புஷ்கலை
மேவிய நாதா மென்மலர்ப் பாதா
கயிலை நாதன் கையிற் பிறந்த
கத்தனே சுத்தனே கார்நிற மேனி
அத்தனே அமலா ஆனந்த ஜோதி
நித்திய சொரூபா நீள்சுடர் விளக்கே
பித்தனே கருணைப் பேரின்ப மோன
பதம்பெறு முனிவோர்க் கிதந்தருந் தலைவா
உலக சுதந்தா உம்பர் நாயக
அன்பர் வினைப்பயம் அகற்றி யருள்வாய்
வாமபாகத்தில் வளர்கறுப் பண்ணனை
இயைபுற வமைத்த வெம்முடை யப்பனே
அடுத்துப் பணிவோர்க் கடுத்த நல்வரங்
கொடுத்துப் பணிகொளுங் கோமான் நீயே
பணிந்தோர்க் கெல்லாம் பலவகை வாழ்வும்
பெருக வருள்செயும் பேரின்ப நிலையே
புவன மனைத்தும் பொன்முடி சூடி
நவகண்ட மாளும் நாதா நினதருள்
யாவர்க்கு மெய்துதல் எளிதோ வரிதோ
நின்னுடை யன்னையாய் முன்ன மமைந்த
காரண ஞான பூரண வல்லோர்
கோவலர் பொருட்டாய்க் கோவர்த் தனகிரி

குடையாய்ப்பிடித்தான் குணமே நின்பால்
அமைந்ததோ வவன்றன் அளவிலாமாயை
எம்பொருட்டாக நின்பா லமைந்ததோ
நெஞ்ச மொருமையாய் நின்பால் நிறுத்திப்
போற்றுவோர்க் கேற்ற புந்தியு மருள்வாய்
அன்பர்கள் நிலைதவிர்ந் தலறவும் வைத்தாய்
திருவுளக் கருத்து சிறியரை வாட்டுமே
எங்கும் இருளாய் எம்மனோர்க் கருளாது
அமைவுட னிருப்ப தமைதியோ முறையோ
ஏகநா யகனே யோக நாயகனே
போகநா யகனே லோகநா யகனே
யாகநா யகனே தியாகநா யகனே
சதுமறை மூல தாமத மகற்றி
இராசத குணமு மெய்தா தழுத்திச்
சத்துவ குணமே தழைத்திட வருளி
வந்துநின் திருவடி வழுத்துவோர்க் கெல்லாம்
வரந்தந் தருள்வாய் வரதநா யகனே
வாழ்வு தருவாய் தாழ்வு நீக்குவாய்
நின்புகழ் பாடியெம் நீள்கிளை யோங்கத்
துயரிலா வாழ்வி லயர்விலா திருக்க
அடியோம் வேண்டிய படியெலா முதவி

முன்னெழுந் தருளுவாய் முதுமறைப் பொருளே
இன்புற வெளியே னியம்பிய புன்மொழி
துதிமொழி யெனவே மதியினிற் கொள்வாய்
தினப்பொழு தளவினில் திருந்திழை பூரணி
புட்கலை யுடனே புறப்பட் டடைந்து
நினைத்த வாமெலாம் நிலையுற வருள்வாய்
ஞான மோன நன்னெறி யருள்வாய்
உலக வாழ்வி லுயர்நிலை யருள்வாய்
கல்வியிற் சிறப்புங் கணிப்பு மருள்வாய்
பதயுகம் வணங்கும் பக்தனை யருளே
பொழியும் விழியாற் புரையற நோக்குவாய்
அழல்விழி யுடையான் அரும்பெறல் மைந்தா
சிவபெரு மான்றன் றிருவடி தேடிய
கண்ணான் புதல்வா காரண தேவா
அண்ணா லாரூர ராகிய சுந்தரர்
காழியம் பதியில் வாழியற் புலவர்
வாக்கி னரசாம் வண்டமிழ் நாவலர்
வாதவூர் வந்த மாணிக்க வாசகர்
என்னு நால்வர் பன்னுந் துதிகளை
விருப்புட னேற்கும் பொருப்புறை பெருமான்
மைந்தனே புலன்கள் ஐந்தினை வென்ற

முனிவோர் மனத்தும் முறைமுறை நூல்தெரி
புலவோ ரகத்தும் பொருந்தும் பெரியோய்
தென்றமிழ் நாட்டில் திவ்ய தலங்களுள்
மிகச்சிறப்புற்று விளங்கும் புகழ் சால்
குமரவே ளமர்ந்த குன்றுக் குடிக்கும்
காளை யூர்வோன் காளையர் கோவில்
நகர்க்கு மிடையில் நடுநிலை யாகிய
அரமனைச் சிறுவய லதனைச் சார்ந்த
களத்தூ ருடைய கருணைச் செல்வனே
சிறப்பிற் சிறந்த சீனக் கண்மாய்
உள்வா யமைந்த உயருங் கோயில்
தலைவா வானோர் தலைவா வெம்மை
அடியாரா யேற்று னடியிணை யருள்வாய்
பாண்டிய வேந்தராற் பண்டைப் பரிசொடும்
ஈங்கடைந் திருக்கு மெங்குல வகுப்பில்
மாத்தூர்க் குடியில் வந்த ஆறுமுகன்
செப்பிய கவியுந் திப்பிய மென்றே
ஏற்றருள் புரிவாய் எம்பெரு மானே
நல்லோர் சேர்க்கையும் நாவலர் வாழ்த்தும்
எம்மவர்க் கருள்வாய் எம்முடை யப்பனே
விதியால் நேர்ந்த விளைபல னெல்லாம்

நன்மையாய்த் தீமையாய் நாங்கள் முற்பிறப்பில்
செய்ததற் கேற்பச் சேர்வன வேனும்
தீமையை மாற்றிச் சிறந்த நன்மையாய்
நினைப்பணி வோர்க்கு நீயமை விப்பாய்
நின்னைப் பணியா நீசர் தமக்கே
முன்வினைப் பயனா முழுவது நன்மை
அமைந்திருந் தாலு மவர்கள் வருந்தித்
துயர்வுறச் செய்வா யயர்வுறப் புரிவாய்
அரமனைச் சிறுவயற் கருகினி லுள்ள
மாத்தூர் உடையான் தோத்திர மேற்பாய்
சினக்கண் மாயு சேகர மாகிய
திருக்களத் தூரிற் றிருக்கோயில் அமர்ந்த
உன்னாலன்றி யுலக வாழ் விடையில
அடியர் கூட்டத்தி லமைதியுண் டாகுமோ
இன்னே யுன்னை யெண்ணிப் புகழும்
நெறியும் நினைக்க நின்னாற் பெற்றோம்
ஆதலா லுன்ற னருள்மழை பொழியவே
காதலா லடைந்தோங் கருணையுற் றருள்வாய்
எம்முடை யப்ப எம்முடை யப்ப
நகர மரபினர் நன்கமைத் திட்ட
ஆலயம் வாழும் ஆதி நாதனே

ஞானச் சுடரொளி மோனப் பெருக்கே
பத்தர்க் கருள்செயும் பராபர நாதா
சித்தமா யுலகஞ் சிறப்பிக்கும் வேதா
முந்நூல் தரித்த முடிப்பெரு மானே
நன்னூல் விரித்து நகராள் பவனே
நின்று துதித்து நின்பதம் போற்றினேன்
அடியேற் கருள்மழை யிடைவிடாப் பொழிந்து
இருவினை யச்சமு மிறைஞ்சிய யிகழ்ந்து
இன்பப் பெருக்கி லிடைவிடா தாழ்ந்து
திளைக்க விரும்பினேன் திருவருள் புரிவாய்
அழகிய நல்லுடை யையனே போற்றி
புளகித நாமப் புனித போற்றி
ஐயனே போற்றி ஆதியே போற்றி
மெய்யனே போற்றி விமலனே போற்றி
துய்யனே போற்றி சொர்ணமே போற்றி
கையனே போற்றி கழலடி போற்றி
போற்றி போற்றி போற்றி போற்றியே.

அய்யனர் அகவல் முற்றும்.

சுபம் பவது.

—:o:—

16A

உ

கணபதி துணை.

ஆலம் பற்றுப் புத்தூருணி
சித்திவிநாயகர்
பதிகமும் பஞ்சகமும் அகவலும்

சு. கி. கறுப்பன்செட்டியாராலும்
நா. கனகராஜையராலும்
இயற்றப்பெற்று,

ராம. அரு. சொக்கலிங்கம்செட்டியாரால்
பொள்ளாச்சி விவேகானந்தா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றன.

1923.

உ

சித்திவிநாயகர்பதிகம்.

ஆக்கியோன் பெயர் முதலியன.

திருமருவு தென்பாண்டி நாட்டினிற் றனவணிசர்
 சேகரமதாயிருக்கும்
செல்வவள மிக்கதொரு கல்விமாநக ரதனிற்
 றிக்கெட்டு மிசை மிக்கதாம்
வரமருவு குடியதனில் வருபெரியர் வழிவந்த
 மாத்தூரி லிசைகின்றதாம்
வளர்கருப்பூருடைய வம்சத்துவந்தபுகழ்
 வாய்ந்துள்ள பெரியோர்களில்
திரமருவு கலையுடைய ஆறுமுகன்மைந்தனைச்
 செயமிக்க கிருஷ்ணப்பனும்
சீரியன் சுவீகார மைந்தனாய் வந்திட்ட
 செல்வக் கருப்பண்ணனே
அரன்மகிழு மகனும் விநாயகனை வாழ்த்தியே
 அணியுடன் பதிகமாக்கி
அரிசநல முற்றன்பர் புகழ்மிகவு முற்றனன்
 அவனிதனில் நீடூழியே

உ

கணபதி துணை.

—:❀:—

ஆலம்பற்றுப் புத்தூருணிச்

சித்திவிநாயகர் பதிகம்.

காப்பு.

பூக்கொண் டருச்சித்துப் போற்றிசெயு மன்பர்களைக்
காக்குங் குணங்கொள் கணபதியைப்,—பாக்கொண்டு
அணிந்து பதிகஞ்சொலவே யன்னான் செம் பொற்றாள்
அணிந்து சிரமீ கொண்டனன்.

நூல்.

சீர்மேவு கல்வி நகர் வாழ்கின்ற வணிகர் குல திலகனாஞ் செய்யநேமஞ்- செயங்கொண்ட சோலீசர் தையல் சௌந்தரிபதந் தினந்தினந் துதிக்கு மன்பன், வார்கொண்ட புவிதனில் வள்ளலருணாசலம் வாந்தினுவீன்றபாலன்- வண்மையுறு சொக்கலிங்கமென்ற வீரப்பன் மனமகிழ்ந் தாவகைபூண்டு, பேர்பெருகு மாலயம் பிரணவசொரூபற்குப் பிரபலமதா யமைத்து- பிரதிஷ்டைசெய்துமே தீபதூபங்களொடு பெருகிவளர்கின்றகாலைப், பாராதியண்டப் பரப்பெலா முறுகின்ற பக்தர்கள்வந்துபணியும் - பகமேறுமாலநகர் புத்தூருணிக்கரை பகர் சித்திவிநாயகக் கடவுளே (1)

கருவிமா முகிலினஞ் சூலுளைந் தலறியே கணமுடன் வருஷித்திடும் - கடவுண்மா நதிதடம் பெருகியே திரையுடன் களிப்புறப் பரவுநீரும், தருவுதவு பூம்பொழில் தற்பெருமை காட்டியே தழைத்துமது சொரியுநீருங், குடதடி னவந்துபண்ணைகடொறும் பாய்தலாற்றக்கபடி செந்நெல்லோங்கி, திருமருவு சற்சனர்கள் வருஷைய்துதாரூது சிறந்தமகேசுவரபூஜைகள் - செய்துவருபுகழ்தர வாதுலர்கள்மகிழ்வுடன் சென்றிடக்காணுகின்ற, பரிதிமதிநுதல்விழிகள் மூன்றுடைய பரசிவப்பன்னைவன்னருள் பாலகா - பகமேறு மாலநகர் புத்தூருணிக்கரை பகர்சித்தி விநாயகக்கடவுளே. (2)

பெரியவர்கள் வாசமும் சமாதிநிலை யுற்றிடும் பிரபலமதான சீரும்· பின்பற்றுமடியவர் துதிக்கின்றகோஷமும் பிரகாசமாய் விளங்கும், வரியவர்கள்வந்துமே பணிந்திடும்போதெலாம் மாறாதசெல்வந்தரும்- வளங்களுமிகுந்திட வள்ளல்களுமீந்திட மாதமும்மாரிபொழியும், தெரிவையர்கள் மாயையிற் சின்னபின்னப்படச் சிக்காது செய்வித்திடும் - தெள்ளமுது கற்பகவிருட்சமுதலானதும் சிறந்தபலனைகொடுக்கும், பரிமளமிகுமலர விழ்ந்திட வண்டினம் பாரகீதங்கள்பாடும்

பகமேறுமாலநகர் புத்தூருணிக்கரை பகர்சித்திவிநாய கக்கடவுளே. (3)

கங்கையொடு தும்பையுஞ் சடுக்கையொடு பிறை யையுங் கருதியே யணியுமீசன்- களிட்டடனீன்றிட்ட வைங்கரக்களிற்றினைக் காணுதற்கெளிதாகுமோ, அங் கையொடு மலர்தூவி அந்தமில்நாமத்தை அநேகநாளர்ச்சித்துமே- அன்பினொடு மென்புருக அரியதவமெய் திட அருள்புரிவர் மனமிரங்கி, நங்கையுமை பாலகா விங்குலவுவினைகளை நசுக்கிரக்ஷணைசெய்திட-நானுனைப் புகழுதற் கருகனலனென்பதனை நன்குநீதெரிந்துகொ ண்டாய், பங்கமுறுமசுரர்கள் துன்பந் துடைத்திடப் பரமாத்ம ராமர்பணியும்- பகமேறு மாலநகர் புத்தூரு ணிக்கரை பகர்சித்திவிநாயகக்கடவுளே. (4)

ஒருகோடு மூன்றுவிழி திருநுதற்கயமுகம் உயர் வாயு மத்தமைந்தும்- உபட்பாதங்களும் பேழைவயி றுங்கொண் டுரியசித்தி புத்திகளைமருவும், திருமேனி யைக்காண அநேகநாள்தேடியும் சித்தமதிரங்கவில்லை- செய்திடுங் குற்றங்க ளளவில்லை யென்னினுஞ் சிறிய னுன் பிள்ளையலவா, உறுதிபெறவுன்றனைப் பூசிக்குமடியருள் ஒருவனுளனென்றுவுன்னி- உலகமயல்தீரவு

ம் உயர் நதியிலேறவும் உகந்தெனைக் காத்தருளுவாய்-
பரையுதவு மைந்தனே வல்லபையின் நேசனே பக்தர்
கட்கனுகூலனே- பகமேறுமாலநகர் புத்தூருணிக்கரை
பகர் சித்திவிநாயகக்கடவுளே (5)

ஓதுமறை யாகம மிதிகாசமுதலாய துன்னையே
போற்றிசெய்யும்- உன்பதம்பணிகின்ற பக்தரைவரை
ந்திட ஒருகோடி வயதுபோதா, எதமறியாமல்யான
றைடுமொழிதவறினும் ஏழைமேற் கிருபைகூர்ந்து
இன்பமது வாகவே பழமொழி யென்றுநீ யேன்று
கொள்ளுவ தான்கடன், ஜீ, சிகி தனிலூரு செட்டியு
முன்றம்பி சிறைதந்து நீக்கி யருள்கை- செய்தியும்நீய
றிவை நின்னடியர் குறைகளைத் தினையளவாய்த் தீர்க்
கவெண்ணி, பாதகப் விலக்கியுன் பாதகமலத்தினைப் பா
வித் துதிக்கவருள்வாய்- பகமேறு மாலநகர் புத்தூரு
ணிக்கரை பகர்சித்தி விநாயகக் கடவுளே. (6)

நீடித்துனடி தனை நினைக்குநன் வினைவுகள் நீங்கா
திருக்கவேண்டும்- நித்தமுன் னடியரைப் பூசித்துவழி
படும் நினைவுதனூறு வேண்டும், வாடித்தவித்திடும் ம
க்கள்தம் துயர்களை மாற்றுதற்கேது வேண்டும் வண்ட

ப்புரட்டர்தம் மனைவாசல்செல்லாத மதியைக்கொடுக்க வேண்டும், ஓடித்திரிந்தலைந் நுழல்கின்றமனமதை யொடுக்கியாட்கொள்ளவேண்டும்- ஒருபோது மாயையிற் செல்லாமலுன்பத முகந்தெனக்கருளல் வண்டும், பாடித்துதித்திடும் பக்தர்க் கிரங்கியருள் பாலிக்கு முமைபாலகா - பகமேறு மாலநகர் புத்தூ ருணிக்கரை பகர் சித்திவிநாயகக்கடவுளே. (7)

பூவினிற்பிள்ளையா புகித்தகேதவிர நின் புண்ணியப் பொற்பதத்தை- புந்தியிற் கொண்டிநான் ஒருபோழுதிலாயினும் போற்றித்திரிந்தேனிலேன், காவினிற் பக்தர்கள் காய்கனியருந்தியே கடும்பசியதா யிருந்து- கனவிலும் மறவாது தோத்திரஞ் செய்துநின் கருணையைக்கைக்கொள்ளுவார், மூவருமுனைத்துதித் தருள் பெறுவரென் றுநூல் முறையிடுவதாலுன்றனை- முதல் வனெனவெண்ணியே நம்பிமோசம்போகு முறைமையதுநலமாகுமோ, பாவலர்கள் துன்பந் துடைத்துநற் பாக்கியமருள் பாராபரன்னருள்பாலகா- பகமேறுமாலநகர் புத்தூருணிக்கரை பகர்சித்திவிநாயகக் கடவுளே.

முப்பத்து முக்கோடி தேவர்முனிவோர்களும் மு

தன்மைபெறு மூர்த்திஇலந்தும்- முன்னமேயுனைத்தொழுது பின்னமதுவாராமல் முடித்திடுவாய்காரியத்தை, தெப்பமதிலாடிவரு மக்கள்தந்துயர்களைத் தீர்த்துநற்கரையேற்றியே- திடமுடைய கசமுகன் றனைவென்று செம்மலெனச் சீரிபசெல்லாமுரைப்ப, வெப்புற்றுமனைமக்கள் சுற்றமெனவெண்ணியே யிறுமாந்திருக்குமென்னை. இசுபாக்கவரெலா நகையாமலென்னுடைய விருவினையகற்றியருள்வாய், பப்புவர்கள்கோட்டமும் பாரிலுனதாட்டமும் பகருதற்கருசனல்லேன்- பகமேறுமாலநகர் புத்தூருணிக்கரை பகர்சித்திவிநாயகக்கடவுளே. (9)

ஆதிநீ ஜோதிநீ யண்டநீ பிண்டநீ அஷ்டபாலகருநீயே- அனலுநீ கானலுநீ யப்புநீ புவியுநீ அகண்ட ஆகாசவெளிநீ, வேதநீ மாலுநீ விமலநீ யமலநீ வேலனையவனுநீயே- வித்துமூளாவிமதி பகலிரவுமானநீ வினைபொருளுமானவனுநீ, சீதம்நீ ஆதியுமந்தமுமிலாதநீதிகழ்ம்பதச் செல்வநீயே-சிற்றறிவினற்சொற்ற துதிபிழைபொறுத்தெனது சிந்தைமகிழ் செய்யவருவாய், பாதிமதி யரவணிப் பாமனுமை போற்றிடும் பக்தாசுதகலோலனே- பகமேறுமாலநகர் புத்தூருணிக்கரை பகர்சித்திவிநாயகக்கடவுளே. (10)

ஐயனே நின் பெருமை யரிபயன்முதற்றேவர் அறியாதுமையல்கொள்ள- அடைபுடனடத்துதிரு விளையாட லடியனே னறியாமையாற்புகலவே, மெய்யனே சிருஷ்டிஸ்திதி சம்காரமென் னுமுத்தொழிலுக்கு மௌனம்பூண்டாய்- மெய்விரதபக்தர்க் கிரங்கியருள் செய்திட்ட மேன்மையைத் தெரியவசமோ, செய்யனே கல்விநகர் வாழ்கறுப் பேந்திரன் செய்தபாப்பதி னொன்றையும்- சிறியன்மொழியென்று கைவிடா தானருள்செய்திடத் தினமுனைப்போற்றிநின்றேன் பையாவ மான்மழு தரித்தவ னிடத்துறை மாசத்தி கந்தமைந்த- பசுமேறு பாலநகர் புத்தூருணிக் கரை பகர் சித்திவிநாயகக் கடவுளே. (11)

வா ழ் த் து.

கல்விநகர்வாழுங் கணபதிதாள் போற்றிசெயும்
செல்வரெலாம்வாழி செழுந்தமிழிற்,—சொல்பதிகம்
வாழியவன் புகழும் வாழிதமிழ்மகளும்
வாழி நீடூழி மகிழ்ந்து.

சித்திவிநாயகர் பதிகம் முற்றும்.

——:❀:——

உ
கணபதிதுணை.

ஆலம்பற்றுப் புத்தூருணி

சித்திவிநாயகர் பஞ்சகம்.

காப்பு.

வேதப் பொருளாம் விநாயகனை வேண்டியவன்
பாதத் துணைமலைத்தாற் பற்றினேன்—சீதப்
பொழில் சூழ்ந்த வாலநகர்ப் புத்தூருணிபாற்(கு)
அழகமையப் பாட லமைத்து.

நூல்.

விண்ணிலை பெற்றவர் மண்மகள் புத்திரர்
வீழ் நிலை யணுகாதே
வேண்டி நினைத் தெமை யாண்டரு ளாண்டவ
விரைவினில் வருகவென,
எண்ணிய நித்திய வாழ்வினை யெள்ளிநின்
இணையடி தொழ வெதிர் வந்-
தின்னருள் தந்தவர் இன்பவளம் பெரி
தெய்த முனைந்து புகும்,
பெண்ணிரு வர்க்கொரு கண்ணென வுற்ற
பெரும் பொருளே! சிவனார்-

179393
Q2998:58.21K14
X123

பெற்[illegible]ளர்த்து விநாயக னென்றொரு
பெயருஞ் சூட்டி யிடும்
திண்ண முறுங்களிறே! யடி பணிவேம்
செய்வினை தீர்த் தருள்வாய்-
சித்தியி னாயக முத்தியி னாயக
சித்தி விநாயகனே. (1)

வித்தகமும் உத்தம வித்தையும் முத்தியும்
விற்பனர் வேண்ட வருள்
வேழ முகத்தவ! வால நகர்க்குறு
வித்தக பெய்ப் பொருளே!
பத்திய துத்திய மத்த நினற்புகழ்
பாடிய பாவலவர்-
பழவினை வழியிடை யழிவது தவிர்முறை
பண்ணிய புண்ணியனே
கத்தனை முத்தனை உத்தம சித்தனைக்-
கடவுளர் தலைவனை மாக்-
கணிபெற வொருமுறை சூழ்வருந் தெய்வக்
களிறே பணி புரிவோர்
சித்தியுறப் புரி சுத்த நலப் பொருள்
தின்மை தவிர்த்தருளே,

சித்தியினாயக முத்தியினாயக
சித்தி விநாயகனே. (2)

பொருள் பொருளென்றழி பொருள்களை நாடிப்
புவியிடை வாழ்வெய்தும்-
புரையுறு மறிவினர் நிறைபெறி வடைவது
புரிபெருமானன்றோ
மருள்மிகு மனையவள் மகள்மகன் மருமகன்
மனை நில முதல வெலாம்-
வருவது மழிவது மொருநொடி யினிலென்
மதிவர வருள் பொருள் நீ
இருள்கெடு மறிவிடை நின்னுரு விலகிட
வினிதருள் புரிபெருமான்
எமையுன தடியவரடியவ ரடியவர்
எனவெணி யாண்டருள்வாய்,
திருமகள் மருமக னெனவரு மிகுபுகழ்
தெய்விக மாமணியே
சித்தியினாயக முத்தியினாயக
சித்தி விநாயகனே. (3)

வெண்பா வகவல் கலிப்பா வஞ்சியும்
வேறுள கவிவகையும்

விழலர்களைப் பொருள் பெறவெணி யுற்றவர்
வீறுபுகழ் பாடியிசைத்,
தண்டா திபர்பணி தண்டாமரை மலர்
அடியிணை யுடைய நினை-
யன்போடும் புகழாது மயங்கிய
வறிவிலி குற்றமெலாம்,
கொண்டாளும் பொருள் நீயென வெண்ணியுன்
குரைகழலே பணிவேன்-
குசைநுனி யொத்தநுண் மதியுடை யுத்தமர்
கூறிய மெய்ப்பொருளே
சென்டாலுயர்வரை வென்றவன் முன்னவ
தேவ சிகாமணியே
சித்தியினுபக முத்தியினுபக
சித்தி விநாயகனே. (4)

ஆல நகர்க்கொரு மூல முதற்பொருள்
ஆன மறைப் பொருளே
ஐங்கர தெய்வ நினங்குசபாசமும்
அன்பர்கள் இன்பமுற
வேலவ னந்தமிழ் வேடுவ மங்கையை
வேண்டி மணம்புரிய-

மிக்க நலந்தா வுற்றது கண்டனம்
வேறுள கவலையெலாம்,
கால னெனப்பெயர் மேவி யொருத்த னெம்
கால மளப்பதெலாம்-
கழிய மிகப்புகழ் பழகிய வாழ்வுறு
கதிபெற வருள்புரிவாய்,
சீல நெறிப்பெறு நூலவர் தேடிய
செம்மை நெறிப்பொருளே-
சித்திவிநாயக முத்திவிநாயக
சித்தி விநாயகனே. (5)

வாழ்த்து.

வாழிதமிழ் வாழியறம் வாழிபொருள் வாழிநலம்
வாழிமழை வாழிமறை வாழிசிவம்—வாழியரி
வாழிகுகன் வாழிசிவை வாழி கணபதிதான்
வாழியநா வல்லார் மகிழ்ந்து.

சித்திவிநாயகர் பஞ்சகம் முற்றும்.

உ

கஜமுக ஸஹாயம்.

—:*:—

சித்திவிநாயகர் அகவல்.

பிரணவப் பொருளே! பெருந்தகை யாளா!
அன்புடை யார்கட் கறிதற் கெளியாய்!
அன்பிலார் நாடி யறிதற் கரியாய்!
நகர வணிகர் நாட்டுக் கோட்டையில்
சிவபெரு மான்வாழ் திருப்பதி யாகிய
கணிப்பருஞ் சிறப்புடைக் கானையர் கோயில்
மாதவர் புகழு மயூர கிரியெனும்
குமரவே ளமர்ந்த குன்றக் குடியாம்
இருநல் லூர்கட் கிடைநிலத் தாகிய
ஆல நகரிடை யமைந்த கோயிலில்
பிலவங்க வரண்டு நிலவிய சித்திரை
மதியினி லமைத்த ஆதிபெறு கோயிலில்
வாழ்வாய் பெரும்பே ரின்பவாழ் வருளும்
தேவா பெரியோர் தேடிப் பணியும்

விநாயக வெம்முடை வினைதீர்த் தருள்செயும்
தலைவனே! முன்னாள் தம்முடல் நீத்து
முத்திபெற்ற முனிவர் குலம்விளங்-
கிடத்துக் கணித்தா யியன்ற நியமத்
திருக்கும் பொருளே எளியோர் தெய்வமே
வாழ்த்துவோர்க் கேற்ற வரமருள் தலைவனே!
அறநிலைக் களமாய் அமைந்த மண்டபம்
முன்னிலை நிற்க முனிகணம் வணங்கும்
நன்னிலத் திருக்கும் நற்பெரும் பொருளே
புண்ணியப் பயனாய்ப் புலவோர் புகழும்
கண்ணியப்பொருளே கடவுண் மாமணியே
ஔவைக் கரும்பொரு ளமைய வுணர்த்திக்
கயிலையங் கிரியைக் காண விரும்பலும்
திருக்கரத் தாலே விருப்புட னெடுத்துப்
பெருமான் கோலம் பெட்புடன் காண்டற்
கருள்செயும் செல்வனே அடியார்க் கெளியனே
நாரையூர் வாழ்ந்த நம்பி யாண்டார்க்குக்
கல்விப் பொருளைக் கனிப்புற வருளி
அன்புடன் அவருத வமுதேற் றருளும்
பொல்லாப் பிள்ளையாம் புதுப் பெயர் பூண்டோய்

வேண்டிய வேண்டுகோள் விரும்பியாங் கடைய
முன்னர் நினக்கு முடிதாழ்த் தன்றியே
எத்தகை யவரும் இன்புற லியலாது
எனின்யாம் எளியேம் என்னே புகல்வோம்
உலகவாழ் விடையில் உறும் பெருங் கவலையில்
உழன்று மற்றது கழன்று பிழைக்கும்
வழியறி யாமல் மயங்குவார்க் கேற்ற
வரந்தந் தருள வந்த நாயகனே
சித்திவிநாயக திருவடி போற்றினேன்
இவ்வுல கிடையிற் செவ்விய வாழ்வும்
இனிப்பிற வாநல வின்ப வாழ்வும்
தந்தருள் புரிவாய் தயாசா கரனே
என்னையே நின்னருட் கேற்குமா றுதவி
உரிமையாக்கினேன் உவந்தேற்றருள்கவே.

சித்திவிநாயகர் அகவல் முற்றும்.

—*:◈:*—

குறிப்பு:— இப்புத்தகம் பரிசோதகர், பதிப்பித்தோர் விருப்பிற் கிணங்கப் பின்னுள்ள இரண்டு பிரபந்தங்கள் புதியனாக இயற்றிச் சேர்த்ததால் ஐந்து பிரபந்தங்கள் என்னும் முகப் பெயர் மாறுபட்டு ஆறு பிரபந்தங்களாயின.

நா. க. பரிசோதகர்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
15	11	மாய	மாய்
ஷை	13	விடையில	விடையில்
17	5	நகரதனில்	நகர்தனில்
19	14	வரியவர்கள்	வறியவர்கள்
21	10	சி சிகி	சிதசிகி
23	12	கானலு	கனலு
24	10	மராசத்தி	பராசத்தி
26	1	பெற்	பெற்று
27	16	ம:மணியே	மாமணியே
29	13	வாழி	வாழி
32	18	யனாக	யனவாக

33
179393

விவேகானந்தா பிரஸ்,
பொள்ளாச்சி.